வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 13.11.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

சுற்றுலாத் துறையின் வளர்ச்சியினால், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும், பாரம்பரிய மரபுச் சின்னங்களை பிரபலப்படுத்தவும் ஏதுவாகும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் முழுமையான மருத்துவ சேவை வழங்குவதில், அரசு, முக்கிய கவனம் செலுத்தி வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் செயல்பட வேண்டிய விதம் குறித்து, மத்திய அரசு, புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

**இந்திய மீன்வள அளவைத் தளமும்,** புதுச்சேரி அரசின் மீன்வளத் துறையும் இணைந்து இன்று புதுச்சேரியில், **கடல் நெகிழிக் குப்பைகள்** பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றை நடத்தின.

*முர்மு*

சுற்றுலாத் துறையின் வளர்ச்சியினால் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் அதிகரிப்பதுடன், பாரம்பரிய மரபுச் சின்னங்களை பிரபலப்படுத்தவும் ஏதுவாகும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். தாத்ரா-நாகர் ஹவேலி மற்றும் டாமன்-டையூ யூனியன் பிரதேசத்திற்கு 3 நாள் பயணம் மேற்கொண்டுள்ள அவர், அங்கு, பல்வேறு வளர்ச்சி திட்டங்களைத் தொடக்கி வைத்துப் பேசினார். முன்னேறி இந்தியா என்னும் கனவை நனவாக்க கிராமங்களை வலுப்படுத்த வேண்டுமென அவர் தமது உரையில் வலியுறுத்தினார். பழங்குடி மக்களின் நலனை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் அவர் உறுதி அளித்தார். முன்னதாக சில்வாசா-வில் உள்ள நமோ மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகத்தை, குடியரசு தலைவர் நேரில் சென்று பார்வையிட்டார். டையூவில் உள்ள ஐஎன்எஸ் குக்ரி நினைவகத்தையும் அவர் பார்வையிட்டார்.

*மக்கள்-மருந்தகம்*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, நாட்டின் பல்வேறு ரயில் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள 18 மக்கள் மருந்தகங்களை, பீகார் மாநிலம்

நர்பங்காவில் இருந்து, காணொளி காட்சி மூலம் தொடக்கி வைத்தார். மொத்தம் 12 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், பீகார் மாநிலத்திற்கான பல்வேறு வளர்ச்சி திட்டங்களையும் அவர் தொடக்கி வைத்தார்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் முழுமையான மருத்துவ சேவை வழங்குவதில், தமது அரசு, முக்கிய கவனம் செலுத்தி வருவதாக, நிகழ்ச்சியில் பேசுகையில் பிரதமர் கூறினார். நோய்த் தடுப்பு பணிகள், நோய் பாதிப்புகளை உடனுக்குடன் கண்டு பிடிக்கும் பணிகள், மருத்துவ சிகிச்சையில் நவீன தொழில் நுட்பங்களின் பயன்பாடு உள்ளிட்ட 5 அம்சங்களுக்கு, அரசு, முக்கியத் துவம் அளித்து வருவதாக அவர் தெரிவித்தார். ஏழைகளுக்கு உதவும் வகையில் நாடு முழுவதும் 1 லட்சத்து 50 ஆயிரம் இடங்களில் **ஆயுஷ்மான் ஆரோக்ய மந்திர்** என்னும் உடல் நலக் கேந்திரங்கள் தொடக்கப் பட்டுள்ளதாகவும், அடுத்த 5 ஆண்டுகளில் நாட்டின் பல்வேறு மருத்துவ கல்லூரிகளில், 75 ஆயிரம் புதிய மாணவர் சேர்க்கை இடங்கள் சேர்க்கப்படும் என்றும் அவர் கூறினார்.

யோகா உள்ளிட்ட ஆயுஷ் மருத்துவ முறைகள் மற்றும் ஊட்டச்சத்து நிலவரங்களின் மேம்பாட்டுப் பணிகளை, தமது அரசு, மருத்துவ சேவைகள் மற்றும் மேம்பட்ட வாழ்க்கை முறைகளுடன் ஒருங்கிணைத்து இருப்பதாக பிரதமர் கூறினார்.

ஆயுஷ்மான் பாரத், பிரதமரின் ஜன் அவுஷதி போன்ற திட்டங்களால், பாரம்பரிய மருத்துவ முறைகள் மற்றும் ஆரோக்கியம் பற்றிய மக்களின் மனப்போக்கு மாறி இருப்பதாகவும், மருந்துகள் மற்றும் மருத்துவ சேவைகள் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படுவதால் நாட்டின் ஆரோக்கிய சூழலில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உடல் தகுதியுடன் கூடிய மக்களை கொண்ட நாடாக இந்தியாவை மேம்படுத்தவே ஃபிட் இண்டியா மற்றும் ஸ்வச் பாரத் இயக்கங்கள் தொடக்கப்பட்டதாக பிரதமர் கூறினார். ஆயுஷ்மான் பாரத் திட்டத்தினால் பெரும் எண்ணிக்கையிலான மக்களின் உயிர் காப்பாற்றப் பட்டுள்ளதாகவும், ஏழை குடும்பங்களுக்கு 1.25 லட்சம் கோடி ரூபாய் பணம் மிச்சமாகி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் காலமான, பீகாரைச் சேர்ந்த நாட்டுப்புற இசைக் கலைஞர் சாரதா சின்ஹாவிற்கு பிரதமர் தமது உரையில் புகழஞ்சலி செலுத்தினார். பீகார் மாநிலத்தின் கோசி மற்றும் மிதுளாப் பகுதிகளில் வெள்ளத் தடுப்பு பணிகளுக்கு, மத்திய அரசு 11 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். பீகார் மாநில ஆளுநர் திரு ஆர் வி அர்லேகர், முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் உட்பட பலர், விழாவில் கலந்து கொண்டனர்.

*ஜார்கண்ட்-தேர்தல்*

ஜார்கண்ட் மாநிலத்தில் 15 மாவட்டங்களுக்கு உட்பட்ட 43 தொகுதிகளில், இன்று முதல் கட்ட சட்டபேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு, அமைதியான முறையில் நடைபெற்றது. பிற்பகல் 3- மணி நிலவரப்படி, 59-சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தன. இன்றைய தேர்தலில், 73 பெண்கள் உட்பட மொத்தம் 683 வேட்பாளர்கள் போட்டிக் களத்தில் இருந்தனர். பாரதிய ஜனதாவைச் சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் திரு சம்பாய் சோரேன், மூத்த ஜேஎம்எம் தலைவர் திருமதி மாஹுவா மாஜி, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு ராமேஸ்வர் ஓரான் உள்ளிட்டோர் இதில் அடங்குவர். இன்று வாக்குப் பதிவு நடைபெற்ற தொகுதிகளில், விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தனர். 200 கம்பெனி மத்திய துணை ராணுவ படையினர், பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மாவட்டங்களுக்கு இடையிலான எல்லைகள் மூடப்பட்டு, ஒடிசா, சட்டீஸ்கர், பீகார் உள்ளிட்ட அண்டை மாநிலங்கள் உடனான எல்லைப் பகுதிகளில், நக்சல் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள், கூட்டுப் பாதுகாப்பு படையினர் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

*எரிசக்தி*

புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி, அமைச்சகம் சார்பில் ஒடிசா மாநிலம் புவனேஷ்வரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 2 நாள் சிந்தனை அரங்கை, நாளை தொடக்கி வைக்கிறார். புதுப்பிக்க வல்ல எரிசக்தி ஆதாரங்கள் மூலமான நாட்டின் மொத்த உற்பத்தி திறனை, 2030-ஆம் ஆண்டிற்குள் 500 கிகாவாட்டாகவும், 2047-ஆம் ஆண்டிற்குள் ஆயிரத்து 800 கிகா வாட்டாகவும் உயர்த்தும் இலக்குகளை எட்டுவதற்கான உத்திகள் குறித்து, இந்த சிந்தனை அரங்கில் விவாதிக்கப்படும். துறைசார்ந்த தொழில் அதிபர்கள், மத்திய- மாநில அரசு அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் நிதி அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்கிறார்கள். தொடக்க விழாவில், புதிய மற்றும் புதுப்பிக்க வல்ல எரிசக்திக்கான இணை அமைச்சர் திரு ஸ்ரீபத் யெஸ்ஸோ நாயக், ஒடிசா முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி உள்ளிட்டோர் கலந்து கொள்ள இருப்பதாக அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*பயிற்சி வகுப்பு*

போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் செயல்பட வேண்டிய விதம் குறித்து, மத்திய அரசு, புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் சரியான முடிவெடுக்க ஏதுவாக, பயிற்சி மையங்கள் தங்களால் வழங்கப்படும் பயிற்சி வகுப்புகள், மற்றும் பயிற்சி வசதிகள்

பற்றிய விவரங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்றும், தவறான விளம்பரங்களை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும் என்றும், இந்த வழிகாட்டு நெறிமுறைகளில் அறிவுறுத்தப் பட்டுள்ளது. பயிற்சி மையங்கள் மூலமாக போட்டித் தேர்வில் வெற்றி பெறும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட படிப்பு மற்றும் வேலையில் சேர்ந்த பின்னர், அவர்களிடம் உரிய அனுமதி பெற்ற பின்னரே, அவர்களின் தனிப்பட்ட விவரங்களை, பயிற்சி மையங்களின் விளம்பரத்திற்கு பயன்படுத்தலாம் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது. பயிற்சி மையங்களில் மாணவர்களின் குறைகளைத் தீர்க்க தனி ஏற்பாடுகள் இருக்க வேண்டும் என்றும் வழிகாட்டு நெறிமுறைகளில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் திருமதி நிதி கரே இந்த நெறிமுறைகளை புதுடெல்லியில் இன்று வெளியிட்டார்.கடந்த ஆண்டு செப்டம்பர் முதல், இவ்வாண்டு ஆகஸ்டு மாதம் வரையிலான காலக் கட்டத்தில் தேசிய நுகர்வோர் உதவி எண் மூலமான தலையீட்டினால், சுமார் 1 கோடி ரூபாய் பணம், பயிற்சி மையங்களால், மாணவர்களுக்கு திருப்பி அளிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*டாக்டர்-தாக்குதல்*

சென்னை கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையில், நோயாளி ஒருவரின் மகனால், டாக்டர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டது குறித்து தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். குற்றம் புரிந்தவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார். மருத்துவமனை வளாகத்தில் பாதுகாப்பை வலுப்படுத்தவும் தமிழக முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இதற்கிடையே, படுகாயம் அடைந்த மருத்துவருக்கு கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையிலேயே, சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மருத்துவரை கத்தியால் குத்திய நபரை போலீசார் கைது செய்துள்ளனர். சம்பவத்தைக் கண்டித்து மருத்துவர்களின் ஒரு பிரிவினர் இன்று வேலை நிறுத்தம் அறிவித்து இருந்தனர்.

*மீன் அளவை*

இந்திய பொருளாதார எல்லைக்கு உட்பட்ட கடல் பகுதியில் மீன்வளத்தை அளவீடு செய்வதற்கான **இந்திய மீன்வள அளவைத் தளத்தின்** சென்னை மண்டல அலுவலகமும், புதுச்சேரி அரசின் மீன்வளத் துறையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த, **கடல் நெகிழி குப்பைகள்** பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி, இன்று புதுச்சேரியில், தேங்காய்த்திட்டு மீன்பிடி துறைமுக வளாகத்தில் நடைபெற்றது. சென்னை மண்டல **மீன்வள அளவை தளத்தின்** இயக்குநர் திபூர்சியஸ், கருத்து பட்டறையில், சிறப்புரை ஆற்றினார். கடல் குப்பைகளின் மேலாண்மை குறித்து தொழில் நுட்ப அமர்வு இடம் பெற்றது. கடல்சார் குப்பைகளை சேகரித்து அகற்ற,

தானாகவே முன் வந்து முயற்சிகளை மேற்கொண்ட, விசைப்படகு உரிமையாளர் நலச் சங்கத்திற்கு, இந்நிகழ்ச்சியின் போது பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. புதுச்சேரி அரசின் மீன்வளத் துறை இணை இயக்குநர் திரு தெய்வசிகாமணி, புதுச்சேரி நகராட்சி ஆணையர் திரு கந்தசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

புகையிலை

புகையிலை மற்றும் போதைப் பழக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து, புதுச்சேரி மாநில சுகாதார இயக்கம் சார்பில், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் தலைமையில், இந்திராகாந்தி மருத்துவக் கல்லூரியில் இன்று நடைபெற்ற விழிப்புணர்வு கூட்டத்தில், பல்வேறு கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் பேராசிரியர்கள் சுமார் 100 பேர் கலந்து கொண்டனர். மருத்துவக் கல்லூரி இணை பேராசிரியர் டாக்டர் பிரகாஷ் மதியழகன் விளக்க உரையாற்றினார். மருத்துவக் கல்லூரி இயக்குநர் டாக்டர் உதயசங்கர், மாநில புகையிலை கட்டுப்பாட்டு அதிகாரி திரு வெங்கடேஷ், முதுநிலை காவல் துறை கண்காணிப்பாளர் திரு கலைவாணன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

உதவி

புதுச்சேரி அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை மூலம் அமலாகும், முதியோர், விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான, மாதாந்திர உதவித் தொகை திட்டத்தின் கீழ், தட்டாஞ்சாவடி தொகுதியைச் சேர்ந்த புதிய பயனாளிகள் 100 பேருக்கு இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி, உதவித் தொகைக்கான ஆணைகளை வழங்கினார். முதலமைச்சரின் இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு கே எஸ் பி ரமேஷ் மற்றும் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வானிலை

இன்று வடதமிழகத்தை ஒட்டிய கடலோர பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால் தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய தினம் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், மயிலாடு துறை, தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழக மற்றும் தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளிலும், தென்மேற்கு மற்றும் மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளிலும், சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி உள்ளிட்ட இடங்களில், 14 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

புதுச்சேரியில் 12 சென்டிமீட்டர் மற்றும் காரைக்காலில் 1 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

கேமிங்

16ஆவது இந்தியா கேம் டெவலப்பர் மாநாடு ஹைதராபாத்தில் இன்று தொடங்கி உள்ளது. கேமிங் மற்றும் கேளிக்கை துறையை மத்திய அரசு பெரிய அளவில் ஊக்குவித்து வருவதாக, இம்மாநாட்டில் பங்கேற்றுள்ள, மத்திய தகவல்-ஒலிபரப்பு துறை செயலர் திரு.சஞ்சய் ஜாஜூ கூறினார். இந்த 3 நாள் மாநாட்டில் 20 ஆயிரம் பேர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

சுற்றுலாத் துறையின் வளர்ச்சியினால், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும், பாரம்பரிய மரபுச் சின்னங்களை பிரபலப்படுத்தவும் ஏதுவாகும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் முழுமையான மருத்துவ சேவை வழங்குவதில், அரசு, முக்கிய கவனம் செலுத்தி வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் செயல்பட வேண்டிய விதம் குறித்து, மத்திய அரசு, புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

இந்திய மீன்வள அளவைத் தளமும், புதுச்சேரி அரசின் மீன்வளத் துறையும் இணைந்து இன்று புதுச்சேரியில், கடல் நெகிழிக் குப்பைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றை நடத்தின.

-------------------------------